ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ இந்திரனோடு ॥

*This document** *has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ இந்திரனோடு ॥

## காப்பிடல்

‡இந்திரனோடு பிரமன்⋆ ஈசன் இமையவர் எல்லாம்⋆
மந்திர மா மலர் கொண்டு⋆ மறைந்துவராய் வந்து நின்றார்⋆
சந்திரன் மாளிகை சேரும்⋆ சதுரர்கள் வெள்ளறை நின்றாய்!⋆
அந்தியம் போதிதுவாகும்⋆ அழகனே! காப்பிட வாராய் (1)

கன்றுகள் இல்லம் புகுந்து⋆
கதறுகின்ற பசுவெல்லாம்⋆
நின்றொழிந்தேன் உன்னைக் கூவி⋆
நேசமேல் ஒன்றும் இலாதாய்!⋆
மன்றில் நில்லேல் அந்திப் போது⋆
மதிள் திருவெள்ளறை நின்றாய்!⋆
நன்று கண்டாய் என்றன் சொல்லு⋆
நான் உன்னைக் காப்பிட வாராய் (2)

செப்போது மென் முலையார்கள்⋆
சிறுசோறும் இல்லும் சிதைத்திட்டு⋆
அப்போது நான் உரப்பப் போய்⋆
அடிசிலும் உண்டிலை ஆள்வாய்!⋆
முப் போதும் வானவர் ஏத்தும்⋆
முனிவர்கள் வெள்ளறை நின்றாய்!⋆
இப்போது நான் ஒன்றும் செய்யேன்⋆
எம்பிரான்! காப்பிட வாராய் (3)

கண்ணில் மணல் கொடு தூவிக்⋆ காலினால் பாய்ந்தனை என்றென்று⋆
எண் அரும் பிள்ளைகள் வந்திட்டு⋆ இவர் ஆர் முறைப்படுகின்றார்⋆
கண்ணனே! வெள்ளறை நின்றாய்!⋆ கண்டாரோடே தீமை செய்வாய்!
வண்ணமே வேலையதொப்பாய்!⋆ வள்ளலே! காப்பிட வாராய் (4)

பல்லாயிரவர் இவ்வூரில்⋆
    பிள்ளைகள் தீமைகள் செய்வார்⋆
எல்லாம் உன் மேல் அன்றிப் போகாது⋆
    எம்பிரான்! நீ இங்கே வாராய்⋆
நல்லார்கள் வெள்ளறை நின்றாய்!⋆
    ஞானச் சுடரே! உன் மேனி⋆
சொல் ஆர வாழ்த்தி நின்றேத்திச்⋆
    சொப்படக் காப்பிட வாராய் (5)

கஞ்சன் கறுக்கொண்டு நின்மேல்⋆ கரு நிறச் செம் மயிர்ப் பேயை⋆
    வஞ்சிப்பதற்கு விடுத்தான்⋆ என்பதோர் வார்த்தையும் உண்டு⋆
மஞ்சு தவழ் மணி மாட⋆ மதிள் திரு வெள்ளறை நின்றாய்!
    அஞ்சுவன் நீ அங்கு நிற்க⋆ அழகனே! காப்பிட வாராய் (6)

கள்ளச் சகடும் மருதும்⋆ கலக்கழிய உதை செய்த⋆
    பிள்ளையரசே!⋆ நீ பேயைப் பிடித்து முலை உண்ட பின்னை⋆
உள்ளவாறொன்றும் அறியேன்⋆ ஒளிவுடை வெள்ளறை நின்றாய்!⋆
    பள்ளிகொள் போதிதுவாகும்⋆ பரமனே! காப்பிட வாராய் (7)

இன்பம் அதனை உயர்த்தாய்!⋆
    இமை அவர்க்கென்றும் அரியாய்!⋆
கும்பக் களிறட்ட கோவே!⋆
    கொடுங்கஞ்சன் நெஞ்சினில் கூற்றே!⋆
செம் பொன் மதிள் வெள்ளறையாய்!⋆
    செல்வத்தினால் வளர் பிள்ளாய்!
கம்பக் கபாலி காண் அங்குக்⋆
    கடிதோடிக் காப்பிட வாராய் (8)

இருக்கொடு நீர் சங்கில் கொண்டிட்டு⋆
    எழில் மறையோர் வந்து நின்றார்⋆
தருக்கேல் நம்பி! சந்தி நின்று⋆
    தாய் சொல்லுக் கொள்ளாய் சில நாள்⋆
திருக்காப்பு நான் உன்னைச் சாத்தத்⋆
    தேசுடை வெள்ளறை நின்றாய்!⋆

உருக் காட்டும் அந்தி விளக்கு⋆ இன்று
    ஒளி கொள்ள ஏற்றுகேன் வாராய் (9)

‡போதமர் செல்வக் கொழுந்து⋆ புணர் திரு வெள்ளறையானை⋆
    மாதர்க்குயர்ந்த அசோதை⋆ மகன் தன்னைக் காப்பிட்ட மாற்றம்⋆
வேதப் பயன் கொள்ள வல்ல⋆ விட்டுசித்தன் சொன்ன மாலை⋆
    பாதப் பயன் கொள்ள வல்ல⋆ பத்தர் உள்ளார் வினை போமே (10)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥